1992 பிப்ரவரி 5]

57—

இலவச காலணி வழங்கும் திட்டம்.

*3543—திரு. மு. தென்னவன்:

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இலவசமாக காலணி வழங்கும் திட்டம் மீண்டும் கொண்டுவரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஒன்றாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை படிக்கின்ற பள்ளி சிறுவர்கள், சத்துணவு சாப்பிடுகின்ற சிறுவர்களுக்கு இலவச காலணி வழங்குகின்ற திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருவதால் இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் கிடைப்பதை தன்னுடைய பொறுப்பாக கருதிக் கொண்டிருக்கிறார்கள் எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், நடக்க, நோயை தடுக்க இலவச காலணி திட்டத்தை மீண்டும் செயற்படுத்தியதை நான் பாராட்டுகிறேன். இந்தத் திட்டத்தின் மூலம் எத்தனை பேர் பயன்பெறுகிறார்கள் என்பதையும், இந்தத் திட்டத்திற்கான ஒரு ஆண்டு செலவு எவ்வளவு என்பதையும், இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் ஒரு குறிப்பிட்ட சமூகத்தை சேர்ந்தவர்கள் வேலை வாய்ப்பைப் பெறுகிறார்கள். அப்படி எத்தனை பேர் வேலை வாய்ப்பைப் பெறுகிறார்கள் என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதன் மூலமாக சமூகநலத் துறையின்கீழ் 39 காலணிகள் தயாரிக்கின்ற பெண்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதன் மூலமாக சுமார் 2 ஆயிரம் பெண்களுக்கு வேலைவாய்ப்பை சமூகநலத்துறை அளித்து வருகிறது. இந்தத் திட்டம் 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை வழங்கப்படக்கூடிய திட்டமாக இருக்கிறது. சத்துணவுச் சாப்பிடுகின்ற அனைத்துக் குழந்தைகளுக்கும் இந்தக் காலணி வழங்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

[1992 பிப்ரவரி 5

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காலணிகள் வழங்குவதை நான் விரோதமாகச் சொல்லவில்லை. இருந்தாலும் கூட 10 வயது வைத்து இந்தக் காலணிகளை தைக்கச் சொல்லுகிறோம். சில பையன்கள் 10 வயதில் இவ்வளவு வளர்ந்து விடுகிறான். 12 வயதில் இவ்வளவு வளர்ந்து விடுகிறான், கால் வளர்கிற அதே மாதிரி காலத்திற்கு தகுந்தாற்போல் இந்தக் காலணிகள் அமையவில்லை. ஆகவே, பலயிடங்களில் இதை நிறைவேற்றி பிரயோசனம் இல்லாமல் இருக்கிறது. ஒன்று, இந்தத் திட்டத்தை நல்லமுறையில் செய்ய வேண்டும் என்றால் ஒவ்வொரு பள்ளியிலும் சத்துணவுச் சாப்பிடுகின்ற குழந்தைகளின் கால்களை அளவு எடுத்து இந்தக் காலணிகளைத் தயார் செய்ய வேண்டும். இல்லையென்றால் இந்தத் திட்டம் செயல்படுவதில் பயன் அற்ற நிலை ஏற்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? எனவே இதை மீண்டும் மறுபரிசீலனைக்கு எடுத்துக்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலணிகளைத் தைக்கின்ற போது குழந்தைகளின் கால்களை அளவு எடுத்துதான் காலணிகள் தைக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல குழந்தைகள் திடீரென்று வளர்வதற்கு அரசு பொறுப்பு எடுத்துக் கொள்ள முடியாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(பார்வையாளர் மாடத்திலிருந்து ஒருவர் குரல் எழுப்பினார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். அன்பழகன்,

திரு. எஸ். அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலணி செய்யும் தொழிலையே நம்பி ஆயிரக்கணக்கான குடும்பங்கள் சேலம் மாவட்டத்தில் குறிப்பாக எனது தொகுதியான நாமக்கல்லில் வசிக்கிறார்கள். அவர்களுக்கு வேறு வேலை இல்லாததால் இப்படிப்பட்ட ஒரு தொழிற்சாலையை எனது தொகுதியில் கொண்டுவர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலணிகள் தைக்கின்ற பெண்கள் கூட்டுறவுச் சங்கங்கள் எந்த மாவட்டத்திலே அமைக்கப்பட்டாலும் அதை சமூகநலத்துறை அங்கீகரிக்கும். ஆகவே சேலம் மாவட்டத்தில் அப்படிப்பட்ட பெண்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படுமானால் அதை சமூக நலத்துறை அங்கீகரிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 58. திரு. உ. பலராமன், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர், . . .